# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC 5/2024 | Date: 05.06.2025 |
| Deposition of Witness for | : | பு.சா.1 | |
| Name | : | Sengottaiayan | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணை :-**

1) நான் சங்ககிரி அரசு மருத்துவமனையில் முதன்மை மருந்தாளுநராக பணிபுரிந்து 2004 இல் பணி ஓய்வு பெற்றேன். நான் பணி ஓய்வு பெறும்போது எனது மாத சம்பளம் ரூபாய் 22,000/- ஆகும். நான் பணி ஓய்வுப்பலனாக ரூபாய் 12,00,000/- பெற்றேன். பணி ஓய்விற்கு பிறகு நான் தனிப்பட்ட முறையில் தொழில் எதுவும் செய்யவில்லை ஆனால் எனது மகன் மூலமாகவும் எனது பெற்றோர் மூலமாகவும் வருமானம் வருகிறது. எனக்கு ஜவகர், சுரேஷ் குமார் என்ற இரு மகன்கள். நாங்கள் தற்போது வரை கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வருகிறோம்.

2) நான் வருமான வரி செலுத்தவில்லை. 2004 க்கு பிறகு நான் பென்சன் தொகை பெற்று வருகிறேன். எனக்கு வருமானம் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி கணேசனை எனக்கு சுமார் 30 வருடங்களாக தெரியும். இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எதிரியுடன் வேறு பணப்பரிவர்த்தனை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன் சிறு சிறு

தொகைகளாக கொடுத்து திரும்பப்பெற்றுள்ளேன். இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எந்தெந்த தேதிகளில் எதிரிக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றால் தேதி ஞாபகமில்லை கைமாற்று பணமாக கொடுத்துள்ளேன். இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எந்தெந்த தேதிகளில் எதிரியுடன் பணம் பரிவர்த்தனை செய்ததற்கான ஆவணம் எதுவும் இல்லை.

3) எதிரிக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். மகன் ஜெர்மனியில் படித்து வருகிறார். எதிரியின் மகன் ஜெர்மனியில் நல்ல வருமானம் பெற்று வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி நிலம், வீடு மற்றும் வாகனங்கள் வைத்து வசதியுடன் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். எதிரிக்கு வாடகை வருமானம் வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) எனது மனைவியின் பெயர் சகுந்தலா. 08.03.2022 அன்று எனது மனைவி அவரது நகையை அடகு வைத்து ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மூலம் ரூபாய் 4,50,000/- வங்கி கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 01.09.2022 அன்று எனது மனைவி அவரது நகையை அடகு வைத்து ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மூலம் ரூபாய் 5,00,000/- வங்கி கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் காலம் கொரோனா காலம் என்றால் சரிதான். நான் 05.06.2022 அன்று என்னிடம் ரூபாய் பத்து லட்சம் இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5) வழக்குக் காசோலையில் நிரப்பப்பட்ட வாசகங்கள் யாரால் நிரப்பட்டது என்று எனக்கு தெரியாது. காசோலையின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் யாரால் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. காசோலை நிரப்பப்பட்ட மையும்

கையொப்பம் செய்யப்பட்ட மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கேட்ட அன்றே கொடுத்தேனா என்றால் இல்லை ஒரு மாதத்திற்கு முன்பிருந்து அவர் கேட்டுக்கொண்டிருந்தார். எதிரி பணம் கேட்ட அன்றே பணம் இருந்ததா என்றால் இருந்தது, பெரிய தொகையாக இருந்ததால் அன்றைய தினம் நான் கொடுக்கவில்லை. ரூபாய் பத்து லட்சம் என்பது பெரிய தொகை என்றால் சரிதான்.

6) பெரிய தொகையை யாரும் காசோலை மட்டும் வாங்கிக்கொண்டு கடன் கொடுக்கமாட்டார்கள் என்றால் சரிதான் ஆனால் எதிரி என்னுடன் பணப்பரிவர்த்தனை செய்து பணத்தை திருப்பி கொடுத்ததின் நம்பிக்கையின் அடிப்படையில் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளாமல் பணம் கொடுத்தேன். எதிரி கடன் தொகையை இரண்டு மாதங்களில் திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். காசோலையை எதிரி கொடுத்த சமயத்தில் இரண்டு மாதம் கழித்து தேதி நிரப்பிக்கொடுத்தாரா என்றால் இல்லை. காசோலையில் எதற்காக ஒரு வருடம் தள்ளி தேதி போட்டு வாங்கினேன் என்றால் எதிரிதான் அவ்வாறு ஒரு வருடம் கழித்து தேதியிட்டு கொடுத்தார். எதிரியிடம் நான் வட்டித்தொகை எதுவும் பெறவில்லை.

7) 1996 இல் சங்ககிரியிலுள்ள பாக்கியலட்சுமி பைனான்சில் எனது மகன் ஜவகரும் எதிரியின் மனைவியும் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். 1996 இல் சங்ககிரியிலுள்ள ஜெயலட்சுமி பைனான்சில் எனது மற்றொரு மகன் சுரேஷ்குமாரும் எதிரியின் மனைவியும் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன பைனான்ஸ் நிறுவனங்களின் கணக்கு வழக்குகளை நான் பார்த்து வந்தேனா என்றால் இல்லை. நான் பணி ஓய்வு பெற்ற பிறகு தனலட்சுமி

பைனான்ஸ் என்ற பெயரில் நானும் எதிரியின் மனைவியும் பைனான்ஸ் தொழில் செய்து வந்தோம் என்றால் சரிதான். மேற்சொன்ன 3 பைனான்ஸ் நிறுவனத்திருந்து 01.04.2012 அன்றே எதிரியின் மனைவி அவருடைய பங்கு விடைபெற்றுவிட்டார் என்றால் சரிதான்.

8) பொதுவாக பைனான்ஸ் நிறுவனத்தில் பணம் கொடுக்கும்போது காசோலை பெறுவது வழக்கம் என்றால் சரிதான். காசோலையை பூர்த்தி செய்துதான் பெறுவோம். பத்திரம் பூர்த்தி செய்யாமல் பெறுவோம். 2012 க்கு பின்பு எதிரி எங்களது பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் பெற்றிருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எதிரியின் நிலத்தை வாங்குவதற்காக அவருடன் நான் விலை பேசினேன் என்றால் இல்லை. எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப எனது வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் சொன்னேன். எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எத்தனை முறை அனுப்பப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை.

9) 30.06.2022 அன்று எதிரி எனக்கு எதிராக காவல் துறைக்கு புகார் கொடுத்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. புகார் சம்பந்தமாக என்னை காவல் நிலையத்திலிருந்து போன் மூலமாக விசாரணைக்கு வருமாறு அழைத்தார்கள் என்றால் இல்லை. நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி காவல் புகார் மீது நடவடிக்கை விடாமல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

10) 05.06.2022 அன்று எதிரி ரூபாய் பத்து லட்சம் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. 05.06.2022 காலம் கொரோனா காலம் என்பதால் எதிரி என்னிடம் ரூபாய் பத்து லட்சம் பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எண்ணிற்கு

பின் உள்ள காசோலைகள் அனைத்தையும் 2014 காலத்திலேயே வசூலுக்கு வந்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2014 லிருந்து 2020 வரை நான்கு காசோலை புத்தகங்கள் வங்கியிலிருந்து பெற்று அவை அனைத்தும் செல்லாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11) எனக்கும் எதிரிக்கும் இருந்த பிரச்சனையில் எதிரியின் காசோலையை பணம் எதுவும் பெறாமலேயே தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படியான தொகை எதுவும் தர வேண்டியது இல்லை என்றாலும் இந்த வழக்கு பொய் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-Sengottaiyan

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.